**ஐந்தாம் வேற்றுமை (இல், இன்)**

- உருப்புகள் -இல், இன், நின்று, இருந்து, காட்டிலும், பார்க்கிலும், விட
- எ.கா : அறிவில் சிறந்தவர் வள்ளுவர்
    - கொடையில் சிறந்தவன் பாரி
    - இந்தியாவின் தெற்கு எல்லை குமரி
    - வீரத்தில் சிறந்தது தமிழ்நாடு
    - மரத்தினின்று இறங்கினான்
    - பணியிலிருந்து ஓய்வு பெற்றார்
    - விந்தியத்தைக் காட்டிலும் இமயம் உயரம்
    - இரும்பைவிட பொன் மதிப்புடையது
    - ஊர் நீங்கினான் - ஊரின் நீங்கினான்
    - ஐந்தாம் வேற்றுமையானது நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருள்களாக வேறுபடுத்தும்.
- எ.கா : தலையின் இழிந்த மயிர் - நீங்கல்
- பாலின் நிறம் கொக்கு - ஒப்பு
- சென்னையின் மேற்கு வேலூர் - எல்லை
- அறிவில்மிக்கவர் ஔவை - ஏது

**ஆறாம் வேற்றுமை (அது)**

- உருப்புகள் - அது, ஆது, அ, உடைய
- எ.கா : முருகனது வீடு
  எனது வீடு
    - தை, மாசி எனத் தமிழ் மாதங்கள் பன்னிரண்டு
    - இராமனது வீடு
    - எனது புத்தகம்
    - என்னுடைய முகம்
    - செங்குட்டுவன் சட்டை- செங்குட்டுவனது சட்டை

**ஏழாம் வேற்றுமை (கண், உள், மேல், கீழ, உள், இல், கால்)**

- உருப்புகள் -கண், இடை, முன், பின், இடம், மேல், கீழ், உள், இல், கால்
- எ.கா : வீட்டின் கண் குழந்தை விளையாடுகிறது
    - பெட்டிக்குள் பணம் இருக்கிறது

- ✶ கூரையின் மேல் சேவல் உள்ளது
- ✶ கட்டிலின் கீழ் நாய் படுத்துள்ளது
- ✶ நல்லாரிடை அறிவு சிறக்கும்
- ✶ என் முன் நில்லாதே
- ✶ அவனிடம் பண்பு உண்டு
- ✶ வாழையின் கீழ் கன்று
- ✶ கந்தனுக்கு பின் முருகன்
- ✶ அவனுக்கு என் மேல் வெறுப்பு
- ✶ தமிழ்க் கடலுக்குள் கவிமுத்து
- ✶ குகை புலி - குகை கண் புலி

❖ குறிப்பு : இல் என்ற உருபு ஐந்தாம் வேற்றுமையில் ஒப்பு, ஏது, நீங்கல் ஆகிய பொருளில் வரும். ஏழாம் வேற்றுமையில் இல் உருபு இடப்பொருளில் வரும்."

❖ எ.கா : மாலையில் மலர்கள் - ஏழாம் வேற்றுமை

❖ மாலையில் இருந்து மலரைப் பிரித்தான் - ஐந்தாம் வேற்றுமை உருவு நீங்கல் பொருளில் வந்துள்ளது.

**எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)-உருபு இல்லை**

❖ படர்க்கை பெயரை முன்னிலைப் பெயராக்கி அழைக்க இவ்வேற்றுமை பயன்படுகிறது.

❖ விளி வேற்றுமை, உருபு இல்லை.

❖ எ.கா : மகன் - மகனே! -ஈற்றில் ஏ மிகுந்தது

- ✶ நங்கை - நங்காய்! - ஈற்றில் ஐ ஆய் என திரிந்தது
- ✶ அன்பன் - அன்ப! ஈறு கெட்டது
- ✶ புலவர் - புலவீர்! ஈறு திரிந்தது
- ✶ தம்பி - தம்பி! இயல்பாதல்

❖ பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தற் பொருளில் வருவது ஆகும்.

❖ இறுதி எழுத்து கெட்டு ஒலிக்கும்.

- ✶ கந்தா, கண்ணா, வேலா

**மூவகைப் போலிகள்**

❖ ஒரு சொல்லின் முதலிலுள்ள எழுத்தோ இடையில் உள்ள எழுத்தோ, இறுதியில் உள்ள எழுத்தோ, மாறுபட்டாலும், பொருள் மாறுபடாது இருப்பின் அது ‘போலி’ எனப்படும்.

- ✶ முதல் → மஞ்சு-மைஞ்சு, மயல்-மையல்
- ✶ இடை → முரசு-முரைசு, அரசியல்-அரைசியல், இலஞ்சி-இலைஞ்சி
- ✶ கடை → அறம்-அறன், பந்தல் -பந்தர்

**முற்றுப்போலி**

- ❖ ஒரு சொல்லில் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பது முற்றுப்போலி ஆகும்.
- ❖ சான்று: அஞ்சு ரூபாய் (ஐந்து ரூபாய்)

**உடனிலை மெய்மயக்கம்**

- ❖ தன் எழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துக்கள் - க், ச், த், ப்
- ❖ சான்று: பக்கம், அச்சம், மொத்தம், அப்பம்

**வேற்றுநிலை மெய்மயக்கம்**

- ❖ தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துக்களுடன் மட்டும் சேர்ந்து வரும் எழுத்துக்கள் வேற்றுநிலை மெய்மயக்கம் எனப்படும்.
- ❖ (தன் எழுத்துக்களுடன் சேராதது - ர், ழ்)
- ❖ எ.கா - சார்பு, வாழ்க்கை
- ❖ தன் எழுத்துக்களுடனும், பிற எழுத்துக்களுடனும் இரண்டுடனும் சேர்ந்து வரும் எழுத்துக்கள் - (ற், ன்)

குற்றம், மேற்கு - ற்

அன்னம், அன்பு - ன்

**உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை:**

- ❖ ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை எனப்படும். எ.கா: நீர்க்குடம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.
- ❖ இத்தொடரில் நீரை உடைய குடம் என விரிந்து பொருளை உணர்த்துகிறது. நீர், குடம் என்னும் சொற்களுக்கு இடையில் "ஐ" என்னும் வேற்றுமை உருபும் "உடைய" என்னும் பயனும் மறைந்து வந்துள்ளன.

**இரட்டைக்கிளவி:**

- ❖ இரட்டைக்கிளவி இரட்டைச் சொல்லாகவே வரும். பிரித்தால் பொருள் தராது.
- ❖ எ.கா.: சலசல, மடமட

**அடுக்குத்தொடர்:**

- ❖ விரைவு, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம், அவலம் முதலிய பொருள்நிலைக்கும் செய்யுளில் இசை நிறைத்தற்கும் ஒரு சொல் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் எனப்படும்.
- ❖ எ.கா.: 1. வாழ்க! வாழ்க! - உவகை. 2. பாம்பு! பாம்பு! - அச்சம்.

**ஒருபொருட் பன்மொழி:**

- ❖ பொருட் சிறப்புக்காக ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் வருவது ஒரு பொருட் பன்மொழியாகும்.
- ❖ எ.கா: மீமிசை ஞாயிறு, ஓங்கி உயர்ந்த மரம்
- ❖ இவற்றுள் மீ,மிசை ஆகிய இரு சொற்களும் மேல் என்னும் ஒரே பொருளை உணர்த்துவன.
  ஓங்கி, உயர்ந்த என்பன இரண்டும் உயரமான என்னும் ஒரே பொருளைத் தருவன.

**இலக்கணப் போலி:**

- ❖ இலக்கண நெறிக்கு மாறுபட்டு முன்னோர்களால் நெடுங்காலமாக வழங்கப்படும் சொற்கள் இலக்கணப் போலி எனப்படும்.
- ❖ எ.கா: நுனி மரம், உலாப்புறம், முன்றில்
- ❖ நுனிமரம் : மரநுனி என்பதே இலக்கண முறைப்படி அமைந்த சொல், ஆனால் இச்சொல் நுனிமரம் என வழக்கத்தில் அமைந்துள்ளது. இவ்வாறு அமைவது இலக்கணப் போலி எனப்படும்.

**மரூஉ:**

- ❖ இலக்கணம் சிதைந்து, சொல்லின் வடிவம் மாறி வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.
- ❖ எ.கா: காஞ்சி - காஞ்சிபுரம், திருச்சி - திருச்சிராப்பள்ளி,ஆர் - யார்

# 5. அணியிலக்கணம்

- ❖ **அணி என்பதற்கு(அழகு) என்று பொருள்.**
- ❖ **அணி இலக்கணம் கூறும் நூல்கள் -தண்டியலங்காரம், மாறனலங்காரம்**